செய்தி மக்கள் தொடர்பு துறை
செய்தி வெளியீடு எண்: 246 நாள்: 23/4/18

# செய்தி குறிப்பு

படித்த வேலையற்ற இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்கும் திட்டம் (UYEGP)

படித்த வேலையற்ற இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்கும் திட்டம் (UYEGP) 2010-2011ம் நிதியாண்டில் வேலையற்ற இளைஞர்கள் சுய தொழில் தொடங்கும் திட்டம் தமிழக அரசால் அறிவிக்கப்பட்டு மாவட்ட தொழில் மைய அலுவலகத்தினால் கடந்த 6 ஆண்டுகளாக செயல்படுத்தப்பட்டு வருகிறது..

இத்திட்டத்தில் உற்பத்தி தொழில்களுக்கு அதிகபட்சம் 10 இலட்சமும், சேவை தொழில்களுக்கு அதிகபட்சம் 3 இலட்சமும், வியாபாரத்திற்கு அதிகபட்சம் 1 இலட்சமும் பெறலாம். இத்திட்டத்தின் கீழ் கடனுதவி பெறுபவர்களின் கல்வித் தகுதி 8-ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்று இருத்தல் வேண்டும். குடும்ப ஆண்டு வருமானம் ரூ.1,50,000/-க்கு மிகைப்படாமல் இருத்தல் வேண்டும். பொது பிரிவினர் 18 வயது முதல் 35 வயதுக்குள்ளும், சிறப்புபிரிவினர் (பெண்கள் மாற்றுத்திறனாளிகள், முன்னாள் இராணுவத்தினர், திருநங்கைகள், சிறுபான்மையினர். பிற்படுத்தப்பட்டோர் மற்றும் தாழ்த்தப்பட்ட வகுப்பினர்) 45 வயதுக்குள்ளும் இருத்தல் வேண்டும். இத்திட்டத்தின் கீழ் திட்ட மதிப்பில் 25 விழுக்காடு மானியம் அதிகபட்சமாக ரூ.1,25,000/- வரை வழங்கப்படும். நடப்பு நிதியாண்டில் (2018 - 19), 200 நபர்களுக்கு ரூபாய்.120.00 இலட்சம் கடன் ஒப்படகல் மற்றும் கடனுதவி வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. எனவே ஆர்வமுள்ள தொழில் முனைவோர்கள் இணையதளம் முகவரி **http://www.msmeonline.tn.gov/in/uyegp** விண்ணப்பித்து அதன் நகலை இணைப்புகளோடு வேலூர் காங்கேயநல்லூர் ரோட்டில் அமைந்து உள்ள பொது மேலாளர், மாவட்ட தொழில் மைய அலுவலகத்தில் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மாவட்ட தொழில் மையம்
வேலூர்- 9.